## ஐக்கிய நாடுகளின் 71ஆவது பொதுச்சபைக் கூட்டத் தொடரில் ஜனாதிபதி கௌரவ மைத்ரிபால சிறிசேன அவர்கள் ஆற்றிய உரை

இனிய வந்தனங்கள், உங்கள் அனைவருக்கும் மும்மணிகளின் நல்லாசிகள், ஆயுபோவன், வணக்கம், அஸ்ஸலாமு அலைக்கும்,

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 71ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் ஜனாதிபதி என்ற ரீதியில் கலந்துகொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையில் புதிய மாற்றத்திற்கான ஒரு யுகத்தை ஆரம்பித்து கடந்த சுமார் 20 மாதங்களுக்குள் நாட்டுக்குத் தேவையான அரசியல், பொருளாதார மறுசீரமைப்பிற்கு முன்னுரிமையளித்து செயற்பட்டுள்ளோம்.

விசேடமாக எனது அரசாங்கம் பதவியேற்பதற்கு முன்னர் இலங்கை மக்கள் அச்சம் மற்றும் பீதியில் வாழ்ந்த ஒரு பின்னணியினை நாம் அகற்றி அதற்குப் பதிலாக மகிழ்ச்சி, சுதந்திரம் மற்றும் ஜனநாயக ரீதியிலான சமூகமொன்றில் அனைவரும் வாழ்வதற்குத் தேவையான அடிப்படையை உருவாக்கியுள்ளோம்.

எனது அரசாங்கத்தின் நோக்கம் உலகில் மக்கள் மிக மகிழ்ச்சியாக வாழும் நாடுகளுள் ஒன்றாக இலங்கையை மாற்றுவதாகும். அதற்காக சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை உறுதிசெய்வதனூடாகவும் பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்துவதனூடாகவும் உலகின் பலம் பொருந்திய சிறந்த மக்களாக இலங்கை மக்களை மாற்றுவது எனது அரசாங்கத்தின் முக்கிய நோக்கமும் அபிலாசையும் ஆகும்.

வறுமை, இன்று இலங்கை உட்பட முழு உலகினையும் ஆட்டிப் படைக்கும் ஒரு சவாலாக மாறி உள்ளது. அதனால் இலங்கையை வறுமையிலிருந்து விடுவிக்கும் ஆண்டாக 2017ஆம் ஆண்டை நாம் பிரகடனப்படுத்தி உள்ளோம். அதற்கமைய பொருளாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு எனது நாட்டு மக்கள் எதிர்நோக்குகின்ற அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பணிக்கு நான் முன்னுரிமையளிக்கிறேன்.

முக்கியமாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துடனும் ஏனைய நாடுகளுடனும் இணைந்து செயற்படும் போதும் எமது நாட்டு மக்களின் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் போதும் அர்ப்பணித்து செயற்படுகின்றோம்.

இந்த சட்டகத்தின் கீழ் நாம் எமது மக்களுக்குத் தேவையான பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னுரிமை வழங்கி உள்ளோம்.

எனவே, எமது நாட்டின் தேவைப்பாடுள்ள அனைத்துத் துறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த, சூழலை பாதுகாப்பதோடு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் ஆதரவின் பேரிலான பரிஸ் சூழல் மாற்றம் தொடர்பான மாநாட்டில் எய்தப்பட்ட தீர்மானத்துக்கு அமைய செயற்பட உறுதிபூண்டுள்ளோம்.

நாட்டிலுள்ள கல்வியறிவுள்ள இளைஞர் சமுதாயத்தின் சார்பில் அறிவை மையமாகக் கொண்ட பொருளாதார கொள்கைகள் ஊடாக புத்தாக்க பொருளாதாரம் போன்றே பசுமைப் பொருளாதாரத்தின் ஊடாக இலங்கை சமூகத்தில் புதிய கொள்கைகளை இலக்காகக் கொண்ட தேசிய அபிவிருத்தியின் முக்கியத்துவத்தினை நாம் இனங்கண்டுள்ளோம்.

தலைவர் அவர்களே,

கடல் வளத்தினைக் கொண்ட ஒரு தீவு என்ற வகையில் எமது நாட்டில் காணப்படும் கடல் வளத்தினால் பெற்றுக்கொள்ளக்கூடிய வளங்களுக்கு முன்னுரிமையளித்து சுற்றுலாக் கைத்தொழில், மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் கடல்வள ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதே புதிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

இலவச சுகாதாரச் சேவை மற்றும் இலவசக் கல்வியை முன்னிலைப்படுத்தும் அதேவேளை, விவசாய அபிவிருத்தி மற்றும் உள்ளூர் கைத்தொழில் துறைகளில் புதிய நுட்பங்களை அறிமுகப்படுத்த எத்தனித்துள்ளோம். இந்நடைமுறைகள் மற்றும் உள்ளூர் கைத்தொழில் அபிவிருத்தியின் மூலம் எமது நாட்டு மக்களுக்கு சிறந்த வசதிகளையும் மேம்பட்ட வாழ்க்கை மட்டத்தையும் வழங்க உறுதிகொண்டுள்ளோம்.

தலைவர் அவர்களே, இன்று உலகின் பல நாடுகளில் சர்வதேச ரீதியாக ஒரு குழப்பமான நிலையைக் காண்கிறோம். யுத்தத்தின் பல்வேறுபட்ட தன்மைகள் சில சந்தர்ப்பங்களில் மிகக் கொடூரமான நிலைமைகளை உருவாக்கியதைப் போன்றே ஒற்றுமையின்மை, வெறுப்பு மற்றும் குரோதம் என்பன புரையோடிப் போன சமூகங்களை நாம் காண முடிகிறது.

இத்தகைய சந்தர்ப்பங்களில், நாகரிக சமூகத்தின் அடிப்டைகளும் மனிதாபிமானமும் பாரதூரமான அச்சுறுத்தலுக்கு முகம்கொடுக்கின்றன. சமூகத்தில் இன்று ஏற்பட்டுள்ள பல்வேறுபட்ட மோதல்களின் போது பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்கும் பணிக்கு சகல நாடுகளும் மனிதாபிமானத்துக்கு மதிப்பளிக்க முன்னுரிமையளிக்க வேண்டுமென நான் நம்புகிறேன்.

இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற வகையில் தேரவாத பௌத்த போதனைகளில் உள்ள விழுமியங்களும் தத்துவமும் இன்று உலகில் நிலவும் பலபிரச்சினைகளுக்குப் பிரதானமான, பயனுள்ள உள்நோக்குகளை வழங்குவதன் ஊடாக தீர்வுகாண முடியுமென்பதை நாம் உணர்கிறோம்.

அவ்வாறே கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து மதம் மற்றும் ஏனைய மதங்களும் தத்துவங்களும் சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்தும் ஒரு காலகட்டமாகவே உலகின் தற்போதைய யுகத்தை நான் நோக்குகின்றேன். இதற்காக அனைத்து நாடுகளினதும் ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

தேவையான இம் மாற்றங்களை மேற்கொள்ளும் வேளை இலங்கை போன்றே உலகின் பல நாடுகள் எதிர்கொள்ளும் பாரதூரமான ஒரு பிரச்சினை பற்றி மதிப்பிற்குரிய ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் கவனத்தை ஈர்ப்பதற்கு நான் விரும்புகிறேன். மனித சமூகம் மற்றும் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட அனைவரையும் அனர்த்தத்திற்கும் அவலத்திற்கும் ஆளாக்கியுள்ள போதைப்பொருள் பிரச்சினையே அதுவாகும். இந்த மாநாடு நேற்று ஆரம்பிக்கப்பட்ட போது ஆரம்பத்தில் உரையாற்றிய பிரேசில் ஜனாதிபதி அவர்கள் இது சமூகங்களுக்கும் சமுதாயங்களுக்கும் விடுவிக்கும் அச்சுறுத்தல் பற்றி விளக்கினார். சமூக ரீதியாக பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட இளைஞர் சமுதாயம் மற்றும் அனைத்து மக்களும் பாரதூரமானதொரு அனர்த்தத்தினை எதிர்நோக்கியுள்ளதுடன் இப்போதைப்பொருள் பிரச்சினையை சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் இல்லாதொழித்தல், முறியடித்தல் மற்றும் கட்டுப்படுத்த வேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கவனத்திற்கு கொண்டு வருவதுடன் தற்போதுள்ளதை விடவும் முறையான மற்றும் தீர்க்கமான ஒரு வேலைத்திட்டத்தின் அவசியத்தை நான் வலியுறுத்துகிறேன்.

அத்தகைய வேலைத்திட்டம் சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாக எல்லா நாடுகளிலும் போதைப்பொருள் பிரச்சினையை முறியடிக்கும் முனைப்புகளையும் முயற்சிகளையும் உள்ளடக்க வேண்டும்.

எனது அரசாங்கம் ஜனநாயகம், சுதந்திரம், நல்லாட்சி மற்றும் சட்டத்தின் ஆதிக்கம் ஆகியவற்றை உறுதி கொள்ளச் செய்வதற்கான பல்வேறு முக்கிய நடைமுறைளை ஏற்படுத்தி உள்ளது. அத்தகைய மாற்றத்துக்குத் தேவையான பல்வேறு நடைமுறைகளின் மூலம் தேசிய நல்லிணக்கத்தை பலப்படுத்தி மீண்டும் எனது நாட்டில் யுத்தம் ஒன்று உருவாவதை தடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது எடுக்கப்பட்டுள்ளன என்பதை நான் மிகத் தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தேசிய நல்லிணக்கத்தை வலுவடையச் செய்யும் போது சுமார் 30 ஆண்டுகள் நிலவிய கொடூர யுத்தத்தை எதிர்கொண்ட ஒரு நாடு என்ற ரீதியில் எமக்கு கிடைத்த அனுபவங்கள் மற்றும் படிப்பினைகள் ஊடாக பயன் பெறுகிறோம். மீண்டும் ஒரு முறை எச்சந்தர்ப்பத்திலும் எனது நாட்டில் யுத்தம் ஒன்று உருவாவதைத் தடுத்தல், நாட்டில் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை உறுதிசெய்தல், தேசிய நல்லிணக்கத்தினூடாக இனங்களுக்கிடையே பலமான ஒற்றுமையை ஏற்படுத்தல் ஆகியவற்றினூடாக முன்னிலைவகிக்கும் ஒரு நாடாக எனது நாட்டை மாற்றுவதற்குத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். இதற்காக எல்லா நாடுகளினதும் சர்வதேச அமைப்புக்களினதும் ஒத்துழைப்பை மிகத் தாழ்மையாகக் கோருகிறேன்.

அரசியல் சீர்திருத்தம், மாற்றம் போன்றவற்றை அறிமுகப்படுத்துவதிலும், தேசிய நல்லிணக்கச் செயன்முறையை வலுவடையச் செய்வதிலும், உள்நாட்டு மற்றும் சுதேச தத்துவத்துக்கும் மக்களின் தேவைகளுக்கும் முக்கியத்துவமும் மரியாதையும் கொடுப்போம். இலங்கையின் சுதந்திரம், இறையாண்மை, ஆள்புல ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொண்டே இவற்றைச் செய்வோம். மற்ற நாடுகள் தங்களது மக்களின் சிறப்பு குணாம்சங்களுக்கும் உள்நாட்டு சிந்தனைப்போக்குக்கும் ஏற்றவாறு செயன்முறைகளை உருவாக்குவது போல, நாங்களும் இலங்கைக்கே உரித்தான விதத்தில் மக்களின் தேவைகளை மதித்து இவற்றைச் செய்வோம். இவ்வாறு சமூக அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும்போது சர்வதேச சமூகத்தின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் ஒரு அறிவுபூர்வமான சமூகத்தை உருவாக்கும் உலக நடைமுறைகளுக்கு ஏற்பவும் செய்ய விழைகிறோம்.

சுமார் 30 ஆண்டுகளாக யுத்தத்தை எதிர்கொண்ட நாம் எப்போதும் தேசிய நல்லிணக்கத்தை பலப்படுத்தி புத்திசாதுர்யமாகவும் அறிவுபூர்வமாகவும் கண்ணியத்துடனும் அமைதியாகவும் நாங்கள் தொடங்கிய பயணத்தைத் தொடர்ந்து, எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்வதற்காக உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பினையும் ஆசீர்வாதத்தையும் எதிர்பார்க்கிறேன்.

பிரதானமாக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மற்றும் அவரது அதிகாரிகளினால் இலங்கைக்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் வழங்கிய ஒத்துழைப்பினை நான் மிகவும் போற்றுகின்றேன்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் அவர்கள் கடந்த காலங்களில் மேற்கொண்ட சர்வதேச ரீதியிலான சேவைகள் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடு ஆகியவற்றை பலப்படுத்துவதற்கும் ஒட்டுமொத்த உலகிற்கும் மனித சமூகத்திற்கும் தேவையான விரிவான அபிவிருத்திச் செயல்முறைகளை நிறைவேற்றுவதற்கும் அவர் ஆற்றிய சேவையை நான் பாராட்டுகின்றேன்.

இறுதியாக எனது நாட்டை அதாவது இலங்கைத் திருநாட்டை உலகின் தலைசிறந்த ஒரு நாடாக மாற்றுவதற்கும், புதிய தலைமுறையினரை நவீன அறிவியலில் சிறந்தவர்களாக மாற்றுவதற்கும் எனது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். நாம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தின் போது நாம் உலகின் அனைத்து நாடுகளுக்கும் முன்மாதிரியான ஒரு நாடாக சுதந்திரமானதும் ஜனநாயக ரீதியிலுமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப எனது அரசாங்கம் பொறுப்புடன் எப்போதும் செயற்படும் எனக் கூறி அதற்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்பினையும் ஆசீர்வாதத்தையும் நல்குமாறு மிக கௌரவமாக வேண்டிக்கொண்டு எனது உரையைப் பூர்த்தி செய்கின்றேன்.

**நன்றி.**

**மும்மணிகளின் நல்லாசிகள்.**

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு**
2016-09-22